மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் இந்தச் சாலையை போர்க்கால அடிப்படையில் விரைவிலே செப்பனிடுவதற்கான நடவடிக்கையை எடுத்த மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மன்னார்குடி நகரத்திலிருந்து இந்தச் சாலைக்கு — இந்தச் சாலை செப்பனிடப்பட்ட பின் செல்லவேண்டுமானால் மன்னார்குடி கீழ்ப்பாலம் என்ற பாலம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்ற காரணத்தினாலும் அந்தப் பாலத்தை 1 1/4 கோடி ரூபாயிலே செப்பனிடப்படும், புதிதாக கட்டப்படும் என்ற நிலைமையை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நாகை நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற விழாவிலே நாகப்பட்டினத்திலே கடந்த ஆண்டு 15.9.94 அன்று இந்தப் பாலம் விரைவிலே கட்டி முடிக்கப்படும், அதற்கான உத்தரவினை இன்றைக்கே வழங்குகிறேன்; அதிகாரிகள் உடனடியாக வேலையைத் தொடங்குவார்கள் என்று அறிவித்தார்கள். அந்தப் பாலத்தினுடைய பணி என்ன நிலைமையிலே இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்டிருக்கின்ற கேள்வி மன்னார்குடி முத்துப்பேட்டை சாலை முழுவதும் மேம்படுத்துவதற்கான திட்டத்தைப் பற்றி கேட்டிருக்கிறார்கள். அந்தப் பாலத்தை பற்றிய குறிப்பு இப்போது அரசிடமிருந்து என்னிடத்திலே வரவில்லை. ஆகவே, அதுசம்பந்தமாக அவர் தெரிவித்திருக்கின்ற கருத்துக்களை தனிக் கேள்வி போட்டால் அதுசம்பந்தமான விவரங்களை இந்த அரசு தெரிவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 488, திரு. எஸ். அன்பழகன் மற்றும் திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

488—

நாமக்கல்லில் ஆட்டோ நகர் தொழிற்சாலை வளாகம்

35684—**திரு. எஸ். அன்பழகன் :**

திரு. சி. இராமசுவாமி:

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 ஏப்ரல் 28]

(அ) நாமக்கல்லில் ஆட்டோ நகர் தொழிற்சாலை வளாகம் தொடங்க காலதாமதமாவதற்குக் காரணம் என்ன?

(ஆ) இப்பணி எந்த ஆண்டு முடிவடையும்?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நாமக்கல்லில் உள்ள லாரி உரிமையாளர்கள், "நாமக்கல் ஆட்டோ நகர் அசோசியேஷன்" என்ற பெயரில் ஏற்படுத்தியுள்ள தொழிற்பேட்டையில் அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்காக ரூ. 100 லட்சம் தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தித் திட்டத்தின் (TNUDP) கீழ் கடன் பெற அவர்களது ஒப்புதல் வேண்டப்பட்டது. சிட்கோ நிறுவனம் பலமுறை நினைவூட்டியும், அவர்கள் ஒப்புதல் வழங்கவில்லை. ஆகையினால் காலதாமதம் ஏற்பட்டு இருக்கிறது.

முற்பகல் 10 -20

திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே லாரி தொழில் நாமக்கல்லில் முதன்மையாக இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அப்படிப்பட்ட அந்தத் தொழிலுக்கு உதிரி பாகங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைக்குத் தான் இந்த ஆட்டோ நகர் தேவைப்படுகிறது. அதற்கான நிலங்கள் வாங்கப்பட்டு 4 ஆண்டுகள் ஆகிவிட்டன. நூற்றுக்கு மேற்பட்ட உப தொழிற்சாலைகள், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய அந்த ஆட்டோ நகர் அமைந்திட 4 ஆண்டுகள் கால தாமதம் ஆகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே நேரத்தில் எத்தனையோ தொழிலுக்கு உத்தரவாதம் கொடுத்த நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களிடம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நாமக்கல் தொகுதி மீது கருணை கூர்ந்து அடிப்படை வசதிகளான சாலை வசதி, தண்ணீர் வசதியாவது, செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களிலே நூற்றுக்கணக்கான தொழிற்பேட்டைகள் இப்போது நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். இன்னும் இதைவிட கூட நவீன முறையில் எலக்ட்ரானிக்

தொழிற்பேட்டைகள் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். ஆக ஒவ்வொரு தொழிற்பேட்டைக்கும் அரசு 100 லட்சம், 200 லட்சம் என்று நிதி வழங்குகின்ற அளவுக்கு அரசிடம் நிதி ஆதாரம் இப்போது இல்லை. மனம் இருந்தாலும் மார்க்கம் இல்லை. ஆக அதன் அடிப்படையில்தான் இந்த நாமக்கல் லாரி உரிமையாளர்கள் அவர்களாகவே 69.17 ஏக்கர் இடத்தை விலைக்கு வாங்கி அதை சிட்கோவிடம் கொடுத்து அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். சிட்கோ அந்தப் .பொறுப்பை ஏற்றுக்கொண்டு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க எல்லா நடவடிக்கைகளும் எடுத்து மானியமாக இந்த ரூபாயை கொடுக்க முடியாது, கடனாகப் பெற்று அதன் மூலம் அதை செய்து கொடுக்கிறோம் என்று தெரிவித்து விட்டார்கள். ஆனால் கடன் பெறுவதற்கு அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இதுவரை ஒப்புதல் அளிக்கவில்லை. ஒப்புதல் அளிக்காததால் தான் இது வருடக் கணக்கில் கால தாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. ஆக அந்த ஒப்புதலை அவர்கள் கொடுத்தார்களானால் கொடுத்த உடன் வெகு விரைவாக அந்தப் பணியை சிட்கோ செய்து முடிக்கும். இப்போது மானியம் கொடுக்கின்ற அளவுக்கு அரசிடம் நிதிநிலை இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல்லில் ஆட்டோ நகர் தொழிற்சாலை வளாகம் அமைக்க கடந்த 4 ஆண்டுகள் கால தாமதம் ஆகிவருகிறது. தொழிலாளர்கள் நலனை முன்னிட்டும் அந்த தொழிலாளர்களுக்கு மானியம் கொடுக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆட்டோ வளாகத்தைத் தொடங்க, மீண்டும் மறுபரிசீலனை செய்து மானியம் கொடுக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நாம் மானியம் கொடுப்பதற்கு அரசிடம் நிதி ஆதாரம் இல்லை என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி க. பழனியம்மாள்.

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு லாரி தொழில் என்று எடுத்துக் கொண்டால் தேசிய அளவில் நாமக்கல்லில் தான் அது பெரும் அளவில் செயல்படுகிறது. வட நாட்டிலிருந்து கூட லாரிகள் வேலை செய்வதற்கு இங்கே நாமக்கல்லுக்கு வருகின்ற சூழ்நிலை இருக்கிறது. இந்தத் தொழில்பேட்டை அமைத்தால் அங்கே இந்த தொழில் மேலும்

1995 ஏப்ரல் 28]

சிறப்படைய வாய்ப்பு இருக்கிறது. நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டது போல் குறைந்தது அந்த தண்ணீர் வசதி, சாலை வசதியாவது மற்ற துறைகளிடம் குடிநீர் வழங்கல், பொதுப்பணித் துறை மூலம் உதவிகேட்டு அதை மட்டுமாவது அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைவிட நொடிந்த தொழிலில் இருப்பவர்களுக்கு எல்லாமே அரசு இதுவரை மானியம் கொடுக்கவில்லை. இது ஒரு புது முன்னோடியாக அவர்கள் உருவாக்கப் பார்க்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அன்பழகன், திருமதி க. பழனியம்மாள், திரு. இராமசுவாமி அவர்கள் எல்லாம் சொல்லுகின்றபோது இந்தியா முழுவதிலும் இருந்தும் பாடி கட்டுவதற்கு, மற்ற பணிகளுக்கு நாமக்கல்லுக்கு வண்டிகள் வருகின்ற நேரத்தில் அந்த சங்கத்தைச் சேர்ந்தவர்கள் உறுதியாக, வசதி படைத்தவர்கள் என்பது தெளிவாக தெரிகிறது. ஆக அப்படி வசதி படைத்தவர்கள் மானியம்கேட்பது நியாயம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *489*, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

489—

பப்பாளி பயிரிட மாதிரித் தோட்டங்கள் அமைத்தல்

**35620*—திரு. ஆர். பி. பரமசிவம்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோ. *6* பப்பாளியை தமிழக விவசாயிகளிடம் ஊக்குவிக்க மாதிரித் தோட்டங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கோ. *6* பப்பாளி ரகத்தினை ஊரகப் பகுதிகளில் ஊட்டமிகு பழத் தோட்டங்கள் அமைக்கும் திட்டத்தில் விவசாயிகளுக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.